# ஏர்போர்ட் - வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரயில் கட்டணம் ரூ.60

சென்னை, பிப். 8–

மெட்ரோ ரயிலில், விமான நிலையத்தில் இருந்து, வண்ணாரப் பேட்டைக்கு, 60 ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில், டி.எம்.எஸ்., முதல் வண்ணாரப் பேட்டை வரை, வரும், 10ம் தேதி முதல், ரயில் போக்குவரத்து துவங்கப் பட உள்ளது.

இதையொட்டி, மெட்ரோ ரயில் நிர்வாகம், புதிய கட்டணத்தை வெளியிட்டுள்ளது. இக் கட்டணம், தேனாம் பேட்டை, டி.எம். எஸ்., – வண் ணாரப்பேட்டை இடையே, ரயில் போக்குவரத்து துவங்கியதும், அமலுக்கு வரும் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.



### கட்டண விபரம்

விமான நிலையத்தில் இருந்து, சின்னமலை வழியாக வண்ணாரப்பேட்டை வரை, கட்டணம் விபரம், ரூபாயில்:

மீனம்பாக்கம் – 10, நங்கநல்லூர்சாலை – 20, ஆலந்துார் – 30, கிண்டி முதல் தேனாம் பேட்டை வரை– 40, டி.எம்.எஸ்., முதல், சென்ட்ரல் வரை – 50, உயர் நீதி மன்றம் முதல், வண்ணா ரப்பேட்டை வரை – 60.

விமான நிலையத்தில் இருந்து, கோயம்பேடு வழியாக, வண்ணாரப் பேட்டைக்கு கட்டணம் விபரம்:

மீனம்பாக்கம் – 10, நங்கநல்லூர் சாலை – 20, ஆலந்துார் – 30, ஈக்காடு தாங்கல் முதல், அரும்பாக் கம் வரை – 40, சி.எம். பி.டி., முதல், அண்ணா நகர் கிழக்கு வரை – 50, ஷெனாய் நகர் முதல், வண்ணாரப்பேட்டை வரை – 60 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### கட்டணம் குறைப்பு

விமான நிலையத்தில் இருந்து, சென்ட்ரலுக்கு, 70 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்பட்டது. இக் கட்டணம், 10 ரூபாய் குறைக்கப்பட்டு, 60 ரூபாயாக, தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.